Theft of sandalwood from Segur forest

* 448 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(*a*) whether a number of persons were held in Segur Range Reserve Forests in Nilgiris district about 4th February 1973 for cutting Sandalwood ; and

(*a*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(2) கவன ஈர்ப்பு.

சென்னை நகரில் காய்கறிகளின் விலை மிகுதியாக உயர்ந்திருப்பதும், அதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அவதியும் குறித்து.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the steep rise in the prices of vegetables in Madras City and the hardship experienced by the people.

THIRU N. K. PALANISWAMY: Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance. namely, the steep rise in the prices of vegetables in Madras City and the hardship experienced by the people.

[முற்பகல் 10-00]

திரு. கே. டி. கே. தங்கமணி : 41-வது விதியின் கீழ் கேள்வி கேட்டு இவ்வளவு நேரமாகியும் சம்பந்தப்பட்ட அமைச்சரைக் காணோமே.

(உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்குள் வந்தார்)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, காய்கறிகள் விலை உயர்வுபற்றி பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ் திரு. என். டென்னிஸ், திரு. என். கே. பழனிசாமி அறிவிப்பு விடுத்திருக்கிறார்கள்.

சென்னை மாநகரத்திற்குத் தேவையான காய்கறிகள் நமது மாநிலத்தில் மட்டுமின்றி அண்டை மாநிலங்களில் உள்ள உற்பத்தி மையங்களிலிருந்து பெரும்பாலும் போக்குவரத்து ஊர்திகள் மூலமாகவும், புகை வண்டிகள் மூலமாகவும் தருவிக்கப்படுகின்றன. ஊட்டி, கொடைக்கானல், பெங்களூர் போன்ற மலைப் பகுதிகளிலிருந்து இங்கிலிஷ் காய்கறிகளும் உருளைக் கிழங்கும், பெல்லாரி, பூனா போன்ற இடங்களிலிருந்து வெங்காயமும், வட ஆற்காடு போன்ற அண்டை மாவட்டங்களிலிருந்து தக்காளி முதலிய காய்கறிகளும் கிடைக்கின்றன. சென்னையைச் சுற்றியுள்ள செங்கல்பட்டு மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஈரோடு, மதுரை, தஞ்சாவூர் போன்ற இடங்களிலிருந்தும் நாட்டு காய்கறிகள் கொண்டுவரப்படுகின்றன. கிழங்கு வகைகள் பெரும்பாலும் கோலாரிலிருந்தும், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவ்வாறாக கிடைக்கப் பெறும் காய்கறிகள் கொத்தவால் சாவடியில் உள்ள ஏறத்தாழ 1,500 மொத்த வணிகர்களால் இறக்குமதி செய்யப்பட்டு தரவாரியாக பிரிக்கப்பட்டு சென்னை நகரத்திலுள்ள ஏறக்குறைய 12,000 சில்லரை வணிகர்கள் மூலமாக சென்னை மாநகரத்தின் பகுதிகளில் ஆங்காங்கு விற்பனை செய்யப்படுகிறது.

சென்னை மாநகரத்திற்கு நாளொன்றுக்கு சராசரி 400 டன்கள் காய்கறிகள் தேவையென கணக்கிடப்பட்டிருக்கின்றது. பொதுவாக காய்கறிகள் உபரியாக உற்பத்தியாகக் கூடிய பருவம் சனவரி திங்களிலிருந்து சூன் திங்கள் வரை என்று எடுத்துக் கொள்ளலாம். இப்பருவத்தில் தேவைக்கேற்ப காய்கறிகள் இறக்குமதி செய்யப்படுவதால் நியாய விலையில் கிடைக்கும். சூன் திங்களுக்குப் பின்பு, இறக்குமதி செய்யப்படும் காய்கறிகளின் அளவு படிப்படியாக குறைந்துவிடுகிறது. இதனால் சிற்சில காலங்களில் தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏற்படக்கூடும். அக்டோபர் திங்களிலிருந்து டிசம்பர் திங்கள் வரை காய்கறிகள் உற்பத்தியில் பற்றாக்குறை காலம் எனப்படும். இப்பருவத்தில் காய்கறிகள் உற்பத்தி

கணிசமாகக் குறைந்துவிடுகிறபடியால் பொதுவாக விலை ஏற்றம் அதிகமாகக் காணப்படும். தற்சமயம் சென்னையில் காய்கறிகளின் விலை சற்று அதிகமாக இருப்பது புதிதல்ல. எப்பொழுதுமே இந்தப் பருவத்தில் விலைகள் கூடுதலாகத் தான் இருக்கக்கூடும் இவ்வாண்டில் காணப்படுகிற கூடுதல் ஆண்டுதோறும் இந்தப் பருவத்தில் ஏற்படக் கூடிய விலை ஏற்றத்தைவிட அதிகமானதும் அல்ல.

இம்மாதத்தில் சென்னை நகரில் காய்கறிகளின் விலைகளும், சென்ற ஆண்டில் இதே பருவத்தில் நிலவிய விலைகளும் பின்வருமாறு.

கொத்தவால்சாவடி விலைகள்.	1972 நவம்பர்.		1973 நவம்பர் 9–11–73.		1973 நவம்பர் 23–11–73.	
	(கிலோ ஒன்றுக்கு)					
	ரூ.	பை.	ரூ.	பை.	ரூ.	பை.
உருளைக்கிழங்கு	1	22	1	35	1	20
வெங்காயம்	0	99	0	85	0	80
கோஸ்	1	04	1	39	1	00
தக்காளி	1	50	1	36	1	40
வெண்டைக்காய்	1	39	1	36	0	70
கத்தரிக்காய்	1	07	1	11	1	00
கேரட்	1	27	1	24	0	70

மலைப்பகுதிகளிலும், தோட்டங்களிலும் காய்கறி உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டமையும் டீசல் எண்ணெயின் விலை ஏற்றத்தால் ஊர்தி கட்டணங்கள் அதிகப்படுத்தப்பட்டமையும் காய்கறிகளின் விலை உயர்வுக்குப் பொதுவான காரணங்களாகக் கூறப்படுகின்றன. நீலகிரி பகுதியில் உருளைக் கிழங்கு நோயால் பாதிக்கப்பட்டதால் உற்பத்தி அதிகமாகக் குறைந்து விட்டதாக சொல்லப்படுகிறது. இதனால் சென்ற மாதத்தில் உருளைக் கிழங்கு விலை அதிகமாகிவிட்டது. இருப்பினும் கடந்த சில நாட்களில் கொடைக்கானல் பகுதிகளிலிருந்து வெகு அதிகமான அளவில் உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படுகிறபடியால் இம்மாதத்தில் உருளைக் கிழங்கு விலை சற்று குறைந்துவருகிறது. ஆந்திரப் பகுதியில் மழையின்மையால் வெங்காயப் பயிர்கள் வாடி விட்டதால் வெங்காயம் போதிய அளவில் சென்னைக்கு கிடைக்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1973 நவம்பர் 27] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

வில்லை. விலையும் ஏற்றமாகவே இருந்து வருகிறது. சென்னையை அடுத்துள்ள செங்கல்பட்டு மாவட்ட பகுதிகளில் மழையின்மையால் நாட்டுக் காய்கறிகள் உற்பத்தி குறைந்துவிட்டது. கடந்த சில நாட்களில் காய்கறி விலைகள் ஓரளவு குறைந்துவருகிறது. டிசம்பர் திங்கள் இறுதிக்குள் எல்லா காய்கறிகளின் விலைகள் கணிசமான அளவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காய்கறிகள் அழுகும் பொருளாக இருப்பதாலும் விலை வித்தியாசத்தில் பாதிக்கப்படக் கூடியதாக இருப்பதாலும் அரசு காய்கறி விற்பனையை ஏற்று நடத்துவது என்பது சாத்தியமில்லை. இருப்பினும் காய்கறிகளின் விலைகளைக் குறைப்பதன் பொருட்டு அரசு திண்மையான நடவடிக்கைகள் எடுத்து காய்கறி வியாபாரிகளுக்குத் தகுந்த ஊக்கம் அளித்து வந்து இருக்கிறது. அரசின் தூண்டுதலின் பேரில் சில ஆண்டுகளுக்கு முன் சென்னை காய்கறி வியாபாரிகள் சங்கம் நகரின் பல பகுதிகளில் நியாய விலை காய்கறி கடைகள் திறந்து அவற்றில் கொத்தவால்சாவடி மொத்த விலைக்கு 20 சதவிகிதத்திற்கு மேற்படாமல் காய்கறிகள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற திட்டத்திற்கு ஒப்புக்கொண்டது. இத்திட்டத்தின் கீழ் மேற்படி சங்கம் சென்னை நகரில் தியாகராய நகர் பேருந்து நிலையம், பனகல் பார்க், சேத்துப்பட்டு, புதுப் பேட்டை, கெல்லிமுனை ஆகிய இடங்களில் நியாய விலைக்கடைகளை நிர்வாகம் செய்து வருகிறது. விரைவில் நந்தனம், அண்ணா நகர், இந்திரா நகர், கோபாலபுரம் ஆக இந்த நான்கு பகுதிகளிலும் நியாய விலைக் கடைகள் திறக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தவிர, சென்னை நகரின் காய்கறி பற்றுக்குறையை ஈடுசெய்யும் நோக்கத்துடன் விவசாய இலாகாவின் முயற்சியால் தமிழ்நாடு காய்கறிகள், பழங்கள் திட்டம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மலைப்பகுதியில் செயல் பட்டுவரும் இந்திய-ஜெர்மனி காய்கறி விஸ்தரிப்பு திட்டத்தின் தொடர்புகொண்டு இங்கிலீஷ் காய்கறிகளையும் சென்னையை சுற்றி 50 மைல் சுற்றளவிலே உள்ள பகுதிகளில் நாட்டு உற்பத்தியாளர் களிடமிருந்து நேரிடையாகவும் நாட்டுக் காய்கறிகளையும் கொள் முதல் செய்து, சென்னைக்கு கொண்டுவந்து, மருத்துவ மனைகள், மாணவர் விடுதிகள் போன்ற நிறுவனங்களுக்கும் நியாய விலையில்

வழங்கிவருகிறது. தவிர இத்திட்டத்தின் மேற்பார்வையில் தமிழ்நாடு அரசு தலைமைக் காரியாலயம், எழிலகம் போன்ற இடங்களில் குறிப்பிட்ட நேரங்களில் காய்கறிகள் நியாய விலையில் அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கப்படுகிறது. இச் சங்கம் இலாபகரமாகவும் பயன்ஃபடத்தக்க முறையிலும் செயல் படுகிறது.

சென்னை மாநகரில் விட்டு கொல்லைப்புறங்களில் காய்கறிகள் உற்பத்தி செய்ய வசதியுள்ள மக்கள் அவரவர்கள் தேவைக்கேற்ப காய்கறி தோட்டங்கள் அமைத்துக்கொள்ள உதவும் நோக்கத் துடன் விவசாய இலாகா திட்டமொன்றை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகரின் பத்து பகுதிகள் ஒவ்வொன்றிலும் காய்கறி விதை டிப்போக்கள் நிறுவப் பட்டிருக்கின்றன. இவற்றிலுள்ள விவசாயப் பணியாளர்கள் ஆங்காங்குள்ள விட்டு சொந்தக்காரர்களை அணுகி, கொல்லைபுறங் களில் காய்கறித் தோட்டம் அமைப்பதில் உதவி செய்து வருகின்றனர். மக்களுக்குத் தேவையான காய்கறி விதைகள், நாற்றுகள், உரங்கள், பூச்சி, பூஞ்சாண மருந்துகள் முதலிய வற்றை நியாயவிலையில் விநியோகம் செய்வதுடன் இவற்றினை பயன்படுத்தும் முறைகளையும் சொல்லிக் கொடுக்கின்றனர். வரும் டிசம்பர் மாதத்தில் சென்னை நகரிலுள்ள மகளிர் சங்கங்களின் ஒத்துழைப்புடன் விட்டுக் சொல்லைப்புறங்களில் காய்கறிகள் பயிரிடுவதற்கு ஊக்கம் அளிப்பதற்காக, சினிமாப்படங்கள் காட்டு வதன் மூலமும், நேரடி நிருபணம் மூலமும் தீவிரப் பிரசாரம் செய்யவும், நல்ல விதைகளை விநியோகம் செய்யவும் விவசாயத் துறை திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் சென்னை மாநகரில் சொந்தமாக குடிமனைகள் உள்ளவர்கள் தாமே குறைந்த செலவில் காய்கறிகள் உற்பத்தி செய்ய தகுந்த வாய்ப்பளிக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், கனம் அமைச்சரவர்கள் சொன்னார்கள், தக்காளி சென்ற வருஷம் 1.50-க்கு விற்றது இந்த வருஷம் 1.36-க்கு விற்கிறது, கத்தரிக்காய் ஒரு கிலோ 1 ரூபாய் 7 காசாக இருந்தது இந்த வருஷம் 1 ரூபாய் 11 காசாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த மாதிரி சொல்வதால் மந்திரியவர் களிடமே பணத்தைக் கொடுத்து வாங்கிக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. காரணம் என்னவென்றால், பெட்ரோல் விலையின்

ஏற்றம் காரணமாக டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகி தக்காளி 2 ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது, கத்திரிக்காய் 1 ரூபாய் 80 காசுக்குத்தான் கிடைக்கிறதே தவிர அதற்குக் குறைவாக இல்லை. எனவே அது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்தப் புள்ளி விவரங்கள் பல இடங்களில் சென்று விசாரித்து நவம்பர் 23-ம் தேதி வரை உள்ள விலைகள் ஆகும். நாங்கள் புள்ளி விவரம் சேகரித்த இடங்களில் நீங்களும் சென்று விசாரித்தால் நிச்சய மாக அந்த விலைக்குக் கிடைக்கும். இந்தப் புள்ளி விவரங்கள் சரியானவை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.